இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
ஞாயிற்றுக்கிழமை 26-11-2023

# நிரந்தரப் போர் நிறுத்தம் வேண்டும்

இஸ்ரேல் - ஹமாஸ் படையினர் இடையிலான போர், நான்கு நாட்கள் நிறுத்தப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தத்தை இரண்டு தரப்பும் போட்டுள்ளார்கள். நான்கு நாட்கள் போர் நிறுத்தத்தால் எந்தப் பயனும் இல்லை. நிரந்தரமான போர் நிறுத்தம்தான் வேண்டும்.

அக்டோபர் - 7 முதல் தொடர்ச்சியாக போர் நடந்து வருகிறது. இதனால் ஏற்பட்ட பாதிப்புக் கொடூரங்கள் அளவிட முடியாதவை. இஸ்ரேல் ராணுவம் நடத்திய தாக்குதலில் இதுவரை 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். 2700க்கும் மேற்பட்டவர்களைக் காணவில்லை. காசாவின் மொத்த மக்கள் தொகை 23 லட்சம் பேர். இதில் இரண்டு பங்கு மக்கள் தங்களது வீடுகளை விட்டு வெளியேறி விட்டார்கள். இஸ்ரேலைச் சேர்ந்த 1200 பேர் கொல்லப்பட்டுள்ளார்கள்.

'போரில் ஒருவர் செத்தால் மட்டும்தான் மரணம். அதற்கு மேற்பட்டவர்கள் செத்தால் அது வெறும் புள்ளிவிவரம் தான்' என்று சொல்வதைப் போல - இவை அனைத்தையும் வெறும் புள்ளிவிவரமாகக் கடந்துவிட முடியாது. 'உலகம் ஒரு குடைக்குள் வந்துவிட்டது' என்று பெருமை பீற்றிக் கொள்ளும் இந்தக் காலத்தில் தான் உலகின் ஒரு பகுதியில் - வெளிச்சத்தில் - உலக சமுதாயத்தின் கண் முன்னால் இத்தகைய கொடூரங்கள் அரங்கேறின. அரங்கேறி வருகின்றன.

**"நான்கு நாட்கள் போர் நிறுத்தத்தின் போது காசாவில் பிணைக் கைதிகளாக உள்ள 50 பெண்கள் மற்றும் சிறார்கள் விடுவிக்கப்படுவார்கள். அந்த நாட்களில் மோதல் ஏற்படாது. மீதமுள்ள கைதிகள் படிப்படியாக விடுவிக்கப்படுவார்கள். போர் நிறுத்தம் ஒவ்வொரு நாளாக நீட்டிக்கப்படும்"** என்று இஸ்ரேல் பிரதமர் அலுவலகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

'இஸ்ரேலில் உள்ள பாலஸ்தீனக் கைதிகளை விடுவித்தால் நாங்கள் எங்கள் வசம் இருக்கும் இஸ்ரேல் கைதிகளை விடுவிக்கத் தயார்' என்று ஹமாஸ் படையினர் சொன்னதால் தான் இந்த நான்கு நாள் போர் நிறுத்தம் ஏற்பட்டது போலத் தெரிகிறது. இஸ்ரேலில் இருந்து 240 பேரை பிணைக் கைதிகளாக ஹமாஸ் படையினர் பிடித்துச் சென்று காசாவில் வைத்துள்ளார்கள். இவர்களைப் பெறும் தந்திரமாகவே இந்த நான்கு நாள் போர் நிறுத்தத்துக்கு இஸ்ரேல் இறங்கி வந்ததைப் போலத் தெரிகிறது.

இப்படி கைதிகளை விடுவிப்பது தொடர்பாக யாருக்காவது எதிர்ப்பு இருந்தால் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கலாம் என்று இஸ்ரேல் அறிவித்து இருப்பதும் சரியான நடவடிக்கை அல்ல. ஏதாவது காரணம் தேடுவதைப் போலவே உள்ளது.

**நான்கு நாட்கள் போர் நிறுத்தம் எதற்காக என்பது குறித்து இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு வெளியிட்டுள்ள அறிக்கையும் அபத்தமாக இருக்கிறது. 'இஸ்ரேல் தாக்குதலால் ஹமாஸ் படையினருக்கு ஏற்பட்ட மன அழுத்தம் காரணமாக தற்காலிக போர் நிறுத்தம் ஏற்பட்டுள்ளது' என்று அவர் அறிவித்திருப்பது இஸ்ரேல் இன்னும் மனம் மாறவில்லை என்பதையே காட்டுகிறது. 'ஹமாஸ் படையினரை ஒழித்தல், இனி இஸ்ரேல் பாதுகாப்புக்கு காசாவால் எந்த அச்சுறுத்தலும் இல்லை என்ற இலக்குகளை அடையும்வரை போர் தொடரும்' என்றும் அவர் அறிவித்திருப்பது போர் நிறுத்தத்துக்கு எதிரான நிலைப்பாடு ஆகும்.**

**நான்கு நாட்கள் போர் நிறுத்தம் என்றும், அது படிப்படியாக ஒவ்வொரு நாளாக நீடிக்கும் என்றும் சொல்வதும் இஸ்ரேல் அரசாங்கம்தான். அந்த நாட்டு அமைச்சர்கள் அனைவரும் கூடி எடுத்த முடிவுதான். அமைச்சரவைக் கூட்டம் நடந்து 3 அமைச்சர்கள் எதிர்க்க - 35 அமைச்சர்கள் ஆதரிக்க எடுக்கப்பட்ட முடிவுதான் இது. அதே நேரத்தில், 'ஹமாஸ் படையினரை ஒழிக்கும் வரை போர் தொடரும்' என்று சொல்வதும் இஸ்ரேல் அரசாங்கம்தான். 'இது போர் நிறுத்தம் அல்ல, நடவடிக்கை இடை நிறுத்தம் என்றுதான் சொல்ல வேண்டும்' என்று இஸ்ரேல் ராணுவம் தெரிவித்திருக்கிறது. பிரதமர் - அமைச்சரவை - ராணுவம் ஆகிய மூன்றும் வேறு வேறு நிலைப்பாடுகளில் உள்ளதை இதன் மூலமாக உணரலாம்.**

'இஸ்ரேல் - ஹமாஸ் போர் என்பது பிற நாடுகளையும் உள்ளடக்கிய மோதலாக உடுவெடுக்காமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்' என்று இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி அவர்கள் சொல்லி இருப்பதையும் கவனிக்க வேண்டும். ஈராக்கில் உள்ள இரண்டு ஹமாஸ் நிலைகள் மீது தங்களது போர்விமானங்கள் தாக்குதல் நடத்தியதாக அமெரிக்கா ஒப்புக் கொண்டிருப்பதையும் இதனுடன் இணைத்துப் பார்க்க வேண்டும். எனவே இஸ்ரேல் - ஹமாஸ் போரை இரு தரப்பின் மோதலாக மட்டும் பார்க்க முடியாது.

**இந்த நான்கு நாள் நாடகங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து - நிரந்தரப் போர் நிறுத்தத்தை இரண்டு தரப்பும் ஒப்பந்தமாக ஆக்க வேண்டும். நிரந்தர போர் நிறுத்தத்துக்கு இஸ்ரேலை உலக நாடுகள் பணிய வைக்க வேண்டும்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.11.2023) சென்னை, காமராஜர் அரங்கில் நடைபெற்ற நினைவில் வாழும் திருமங்கலம் கோபால் அவர்களின் மகன் கோ. இராஜ்குமார் – சா. சஜீ ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தினார். உடன் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு, சட்டமன்ற உறுப்பினர் மரு. நா. எழிலன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.எஸ். பாரதி, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் பூச்சி முருகன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு தலைவர் நே.சிற்றரசு மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

### பயிற்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் உயர்த்தப்பட்ட ஊக்கத்தொகை -

# அர்ச்சகர்கள் பிள்ளைகளின் கல்வி ஊக்கத்தொகை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, நவ. 26-

கன்னியாகுமரி மாவட்ட திருக்கோயில்களின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு செலவிற்காக அரசு மானியம் ரூ.8 கோடிக்கான காசோலை, ஒரு காலபூஜைத்திட்டதிருக்கோயில்களில் பணிபுரிந்து வரும் அர்ச்சகர்களின் மகன் / மகள்களின் மேற்படிப்பிற்கான கல்வி உதவித்தொகை, பயிற்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கான உயர்த்தப்பட்ட ஊக்கத் தொகைக்கான வரைவோலைகளை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.11.2023) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் கன்னியாகுமரி மாவட்டத் திருக்கோயில் களின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு செலவிற்காக தற்போது வழங்கப்பட்டு வரும் அரசு மானியத்தை ரூ.6 கோடியிலிருந்து ரூ.8 கோடியாக உயர்த்தி அதற்கான காசோலையை சுசீந்திரம் - கன்னியாகுமரி மாவட்ட திருக்கோயில்களின் அறங்காவலர் குழுத் தலைவர் கோ.இராமகிருஷ்ணன் அவர்களிடம் வழங்கினார்.

மேலும், ஒருகால பூஜைத் திட்ட திருக்கோயில்களில் பணிபுரிந்து வரும் அர்ச்சகர்களின் மகன் / மகள்களின் மேற்படிப்பிற்கு உயர்கல்வித் தொகையினை 400 மாணவர்களுக்கு வழங்கிடும் அடையாளமாக 8 மாணவர்களுக்கு அதற்கான வங்கி வரைவோலைகளையும், திருக்கோயில்கள் சார்பில் நடத்தப்படும் பயிற்சிப் பள்ளிகளில் முழு நேரமாகவும், பகுதி நேரமாகவும் பயிலும் மாணவர்களுக்கான ஊக்கத் தொகையை முறையே ரூ.4,000/ மற்றும் ரூ.2,000/மாக உயர்த்தி 292 மாணவர்களுக்கு வழங்கிடும் அடையாளமாக 8 மாணவர்களுக்கு அதற்கான வங்கி வரைவோலைகளையும் வழங்கினார்.

**கன்னியாகுமரி மாவட்டத் திருக்கோயில்களின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு செலவிற்காக ரூ.8 கோடி அரசு மானியம் வழங்குதல்**

2023 - 2024 ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கையில், "கன்னியாகுமரி மாவட்டத்தின் இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்கள் நிர்வாகச் செலவினங்களுக்காக தற்போது ரூ.6 கோடி வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகை குறைவாக உள்ள காரணத்தால் மேற்படி திருக்கோயில்கள் நிர்வாக செலவினங்களுக்காக வழங்கப்படும் அரசு மானியத் தொகை இவ்வாண்டு ரூ.6 கோடியிலிருந்து ரூ.8 கோடியாக உயர்த்தப்படும்" என்று அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள 490 திருக்கோயில்களின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு செலவிற்காக அரசு மானியமாக ரூ.8 கோடிக்கான காசோலையினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சுசீந்திரம் - கன்னியாகுமரி மாவட்ட திருக்கோயில்களின் அறங்காவலர் குழுத் தலைவர் அவர்களிடம் வழங்கினார்.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள 490 திருக்கோயில்களின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு செலவிற்காக 2019 - 2020 ஆம் நிதியாண்டு வரை ரூ.3 கோடி அரசு மானியமாக வழங்கப்பட்டு வந்த நிலையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2021 - 2022 ஆம் நிதியாண்டு முதல் அம்மானியத்தை ரூ.6 கோடியாக உயர்த்தி, கடந்த 27.12.2021 அன்று வழங்கினார்கள். தற்போது அத்தொகை போதுமானதாக இல்லாததால் இந்த நிதியாண்டு முதல் அரசு மானியத் தொகை ரூ.8 கோடியாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

**ஒருகால பூஜைத் திட்ட திருக்கோயில்களில் பணிபுரிந்து வரும் அர்ச்சகர்களின் மகன் / மகள்களின் மேற்படிப்பிற்கு கல்வி உதவித் தொகை வழங்குதல்**

2023 - 2024 ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கையில், "ஒரு கால பூஜை திட்ட திருக்கோயில்களில் பணியாற்றும் அர்ச்சகர்களின் பிள்ளைகளின் நலன் கருதி மேற்படிப்பிற்கு ஆண்டொன்றுக்கு 400 மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கிட மைய நிதி ஏற்படுத்தப்படும்" எனவும் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, ஒருகால பூஜைத் திட்ட திருக்கோயில்களில் பணிபுரிந்து வரும் அர்ச்சகர்களின் மகன் / மகள்களின் மேற்படிப்பிற்கான உயர்கல்வித் தொகையினை 400 மாணவர்களுக்கு வழங்கிடும் அடையாளமாக 8 மாணவர்களுக்கு அதற்கான வங்கி வரைவோலைகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டிலுள்ள ஒரு காலபூஜைத்திட்டதிருக்கோயில்களில் பணிபுரிந்து வரும் அர்ச்சகர்களின் மகன் / மகள்களின் மேற்படிப்பிற்கு உதவிடும் வகையில் பள்ளி மற்றும் கல்லூரிக் கல்வி மேம்பாட்டு மைய நிதி மூலம் கல்வி உதவித் தொகையாக அதிகபட்சம் ரூ.10,000/ அல்லது கல்லூரியால் நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணத் தொகை இவற்றில் எது குறைவோ அந்த தொகை ஆண்டுதோறும் 400 மாணவர்களுக்கு வழங்கப்படும். இதனால் அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் கலை மற்றும் அறிவியல், பொறியியல், மருத்துவம், சட்டம் மற்றும் உயர் கல்வி பயிலும் அர்ச்சகர்களின் பிள்ளைகள் பயன்பெறுவர்.

**திருக்கோயில்கள் சார்பில் நடத்தப்படும் பயிற்சிப் பள்ளிகளில் முழு நேரமாகவும், பகுதி நேரமாகவும் பயிலும் மாணவர்களுக்கு உயர்த்தப்பட்ட ஊக்கத் தொகை வழங்குதல்**

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற வரலாற்று சிறப்புமிக்க முன்னோடி திட்டத்தை கொண்டுவந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, திருக்கோயில்கள் சார்பில் நடத்தப்படும் பயிற்சி பள்ளிகளில் முழு நேரம் / பகுதி நேரம் பயிலும் மாணவர்களுக்கான ஊக்கத் தொகை உயர்த்தி வழங்கப்படும் என மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்ததை தொடர்ந்து அரசாணை வெளியிடப்பட்டது.

அதன்படி, திருக்கோயில்கள் சார்பில் நடத்தப்படும் பயிற்சிப் பள்ளிகளில் முழு நேரமாகவும், பகுதி நேரமாகவும் பயிலும் மாணவர்களுக்கான ஊக்கத் தொகையை முறையே ரூ.4,000/மற்றும் ரூ.2,000/ மாக உயர்த்தி 292 மாணவர்களுக்கு வழங்கிடும் அடையாளமாக 8 மாணவர்களுக்கு அதற்கான வங்கி வரைவோலைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, திருக்கோயில்களின் சார்பில் நடத்தப்பட்டு வரும் அர்ச்சகர், ஓதுவார், வேதாகமம், தவில் மற்றும் நாதஸ்வரம், பிரபந்த விண்ணப்ப பாடசாலை ஆகிய 15 பயிற்சிப் பள்ளிகளில் முழுநேர பயிற்சிப் பள்ளிகளில் மாதந்தோறும் வழங்கப்படும் ஊக்கத் தொகை ரூ.3,000/ லிருந்து ரூ.4,000/மாகவும், பகுதி நேர பயிற்சிப் பள்ளிகளில் மாதந்தோறும் வழங்கப்படும் ஊக்கத் தொகை ரூ.1,500/ லிருந்து ரூ.2,000/ மாகவும் உயர்த்தி அந்தந்த திருக்கோயில் நிதியிலிருந்து வழங்கப்படும். இதன்மூலம் முழுநேர பயிற்சி பெறும் 212 மாணவர்களும், பகுதிநேர பயிற்சி பெறும் 80 மாணவர்களும், என மொத்தம் 292 மாணவர்கள் பயன்பெறுவர்.

இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர் திருமதி ந.திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா ஆகியோர் கலந்து கொண்டனர்.

